# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2017.08.03 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

பிரதம அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

ச.வ.ஓ 41/2017

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

***1.*** இச்சட்டம், அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் 154ஈஈ என்னும் புதிய உறுப்புரையை உட்புகுத்துதல்.*

***2.*** (இதனகத்துப்பின்னர் "அரசியலமைப்பு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154ஈ என்னும் உறுப்புரையை உடனடுத்துப் பின்வரும் புதிய உறுப்புரை இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது அரசியலமைப்பின் 154ஈஈ என்னும் உறுப்புரையாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"மாகாண சபைகளின் தேர்தல்.*

154ஈஈ. எல்லா மாகாண சபைகளினதும் உறுப்பினர்களின் தேர்தல் ஒரே தேதியில் நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், (இவ்வத்தியாயத்தில் "குறித்துரைக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) எல்லா மாகாண சபைகளும் கலைக்கப்பட்டதாகவிருக்கவேண்டிய தேதியைப் பாராளுமன்றம் தீர்மானித்தலும் வேண்டும் :

ஆயின், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட தேதி, கடைசியாக அமைத்துருவாக்கப்பட்ட மாகாண சபையின் பதவிக்காலம் முடிவடைவதற்குப் பின்னராகவிருத்தலாகாது.".

*அரசியலமைப்பின் 154உ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

***3.*** அரசியலமைப்பின் 154உ என்னும் உறுப்புரை, "கலைப்பொன்றாகச் செயற்படுதலும் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது :-

"கலைப்பொன்றாகச் செயற்படுதலும் வேண்டும் :

2 -PL 005348-475 (2017/08)

ஆயின், எவ்வாறாயினும், 154ஈஈ என்னும் உறுப்புரையின்கீழ் குறித்துரைக்கப்பட்ட தேதியைத் தீர்மானிப்பதன் மேல் -

(அ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் மாகாண சபையின் பதவிக்காலம் குறித்துரைக்கப்பட்ட தேதிவரை நீடிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மாகாண சபை குறித்துரைக்கப்பட்ட தேதியன்று கலைக்கப்பட்டதாகவிருத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட தேதிக்கப்பால் தொடர்ந்திருக்கின்ற ஏதேனும் மாகாண சபையின் பதவிக்காலம் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று முடிவடைதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மாகாண சபை குறித்துரைக்கப்பட்ட தேதியன்று கலைக்கப்பட்டதாக விருத்தலும் வேண்டும்.".

*அரசியலமைப்பில் 154உஉ என்னும் புதிய உறுப்புரையை உட்புகுத்துதல்.*

**4.** அரசியலமைப்பின் 154உ என்னும் உறுப்புரையை உடனடுத்துப் பின்வரும் புதிய உறுப்புரை இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது அரசியலமைப்பின் 154உஉ என்னும் உறுப்புரையாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"பாராளுமன்றம் மாகாணசபையொன்றின் தத்துவங்களைப் பிரயோகித்தல்.

154உஉ. உறுப்புரை 154ஆ என்பதன் (8) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகளினது நடைமுறையின் காரணத்தால் அல்லது ஏதேனும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வேறேதேனும் காரணத்தால், ஏதேனும் மாகாண சபை கலைக்கப்படும் பட்சத்தில், அத்தகைய மாகாண சபையின் தத்துவங்கள், குறித்துரைக்கப்பட்ட தேதிவரை பாராளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், உறுப்புரைகள் 154ஔ மற்றும் 154க என்பவற்றின் ஏற்பாடுகள், அம்மாகாண சபையின் தத்துவங்களைப் பிரயோகித்தல் தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்